This Question Paper consists of 45 questions 16 printed pages.
16 பக்கங்களை க்கொண்ட இவ்வினாத்தாளில் 45 வினாக்கள் உள்ளன.

Roll No. | | | | | | | | | | | | |
(ரோல் நம்பர்)

**Code No. 69/SS/A/TM**
கோட் நம்பர்

**Set /** செட் **A**

# TAMIL
# தமிழ்
# (304)

Day and Date of Examination : ..............................................................................
(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)

Signature of Invigilators : 1. ..............................................................................
(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்) 2. ..............................................................................

***பொதுக்குறிப்புகள் :***

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும், வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும், மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும், அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4. உங்களது வினாத்தாளின் எண் 69/SS/A/TM மற்றும் செட் A எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



Unnati Educations
9899436384, 9654279279

# TAMIL

# தமிழ்

# (606)

காலம் : 3 மணி ] [ மொ. மதிப்பெண் : 100

1. அனைத்து கேள்விகளுக்கும் பதில்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பதில் புத்தகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.
2. இந்த வினாத்தாளை படிக்க 15 நிமிட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. வினாத்தாள் மதியம் 02.15 மணிக்கு விநியோகிக்கப்படும். 02.15 மணி முதல் மதியம் 02.30 மணி வரை, மாணவர்கள் வினாத்தாளை மட்டுமே படிக்க வேண்டும், இந்த காலகட்டத்தில் பதில் புத்தகத்தில் பதில் எழுத மாட்டார்கள்.

**பகுதி-அ**

**பிரிவு - அ: தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப் பகுதி**

(5 செய்யுள் + 9 உரைநடை = 14 மதிப்பெண்கள்)

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:**

**1.** வேதத்தின் உட்கருத்தை அறிந்தவர்? 1

**2.** கிறிஸ்தவக் கம்பர் என அழைக்கப்படுபவர்? 1

**3.** இராமலிங்க அடிகளை மக்கள் அன்புடன் அழைத்த பெயர்? 1

**4.** 'நல்ல' என்னும் அடைமொழியோடு சிறப்பிக்கப்பெறும் நூல் எது? 1

**5.** முண்டாசுக் கவிஞர் யார்? 1



Unnati Educations
9899436384, 9654279279

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 6-7)**

கிழக்குக் கடற்கரைச் சாலையில் தொடர்ந்தது எங்களது பயணம். இதில் பாண்டிச்சேரியிலுள்ள அரவிந்தர் ஆசிரமம். ஆரோவில்நகர் உள்பட அங்குள்ள முக்கிய இடங்களையும் எழில் மிகு கடற்கரையையும் கண்டு களித்தோம். பின் கோவலன் கண்ணகி வாழ்ந்த பூம்புகாரை அடைந்தோம். சிலப்பதிகாரக் காட்சிகளைச் சிறப்பாக வடிவமைப்புச் செய்துள்ள கலைக்கூடத்தைக் கண்டோம். பின்பு, தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையால் பராமரிக்கப்படும் தரங்கம்பாடிக் கோட்டையைப் பார்த்தோம். முகமதியர்களின் புனிதத்தலமாக விளங்கும் நாகூர் தர்கா தரிசனம் செய்தபோது இந்துக்களுக்குத் திருநீறு வழங்கப்பட்டது சிறப்பாகும். உலகப் பிரசித்திப் பெற்ற வேளாங்கண்ணி மாதாவின் அருள்பெற்றோம். ராஜாஜி உப்புச் சத்தியாகிரகத்தை நடத்திய பெருமைப் பெற்ற இடமான திருமறைக்காட்டினைக் கண்டோம்.

அடுத்து, தஞ்சைக்குச் சென்றோம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இராசராசச் சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பிரகதீசுவரர் ஆலயத்தைக் கண்குளிரக் கண்டுகளித்தோம். இங்கு 219 அடி உயரமுள்ள பெரிய கோயிலின் எழில்மிக்க சிற்ப வேலைப்பாடுகளும் வண்ண ஓவியங்களும் ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ள 12 அடி உயர நந்தியும் பார்ப்பவரைப் பிரமிப்பூட்டும் வகையில் அமைந்துள்ளன. தஞ்சைக்குப் பெருமை சேர்க்கும் அரண்மனையில் உள்ள சரஸ்வதி மகால் நூலகத்தில் 44 ஆயிரம் சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. உலக மொழிகளிலுள்ள அரிய நூல்கள் இந்த நூலகத்தில் உள்ளன.

அடுத்து, திருச்சியிலிருந்து புதுக்கோட்டை புறப்படுகிறோம். நாம் இப்போது பார்க்கப்போவது சித்தன்னவாசல் குகைக்கோயில். இங்குச் சுவர் ஓவியங்கள் அஜந்தா ஓவியங்கள் போல் அமைந்துள்ளன. மனிதர்கள், மிருகங்கள், மலர்கள் நடனக்காட்சி என விதவிதமான ஓவியங்கள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. நாம் இப்போது மதுரையை நோக்கிப் புறபடுகிறோம். செல்லும் வழியில் அமைந்துள்ள திருமயம் கோட்டையைப் பார்த்துச் செல்வோம். இக்கோட்டை 16-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.

**6.** பின்வருவனவற்றுள் சரியா தவறா எனக் கண்டறிக. 2

*(i)* அரவிந்தர் ஆசிரமம் சென்னை நகரில் அமைந்துள்ளது.

*(ii)* ராஜாஜி உப்புச் சத்தியாகிரகம் நடத்திய பெருமைப் பெற்ற இடம் திருமறைக்காடு.



Unnati Educations
9899436384, 9654279279

**7.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 1

தஞ்சைப் பிரகதீசுவரர் கோவிலின் உயரம்?

(அ) 219

(ஆ) 229

(இ) 239

(ஈ) 249

**8.** பொருத்துக. 4

| | | |
|---|---|---|
| (அ) ஆண்டாள் | - | திருமந்திரம் |
| (ஆ) திரிகூடராசப்பக்கவிராயர் | - | திருப்பாவை |
| (இ) திருமூலர் | - | திருக்குற்றாலக் குறவஞ்சி |
| (ஈ) ஜெயங்கொண்டார் | - | கலிங்கத்துப்பரணி |

**9.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 2

*(i)* கதவு சிறுகதையை எழுதியவர்?

(அ) ஜெயகாந்தன்

(ஆ) கி.ராஜநாரயணன்

(இ) அண்ணா

(ஈ) புதுமைப்பித்தன்



Unnati Educations
9899436384, 9654279279

(ii) கந்தன் டீ குடிக்கக் கடைக்குச் சென்றபோது எதிரே வந்தவர்?

(அ) செல்லையா

(ஆ) கருப்பையா

(இ) மூக்கையா

(ஈ) தும்பையா

**பிரிவு - ஆ**

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 10-11)**

கடிதம் என்ற சொல்லுக்கு 'எழுதிய செய்தியுள்ள காகிதம்' என்று பொருள். பேச்சு வழக்கில் கடிதம் என்பது 'கடுதாசி' என்று வழங்கப்படுகிறது. இலக்கிய வழக்கில் ஓலை, மடல், முடங்கல், பத்திரம், திருமுகம் என்ற சொற்களால் வழங்கப்படுகின்றது.

பனை, தென்னை முதலியவற்றின் ஓலைகளில் எழுதியனுப்பியதால் அதனை 'ஓலை' என்றும் 'மடல்' என்றும் கூறினர். எழுதியதை முடக்கி(மடக்கி) அனுப்பியதால் 'முடங்கல்' என்றனர். இலைகளில் எழுதியதால் 'பத்திரம்' என்றனர். அரசன், இறைவன், திருத்தொண்டர்கள், ஆசான், அமைச்சர் போன்றோர் எழுதியதை 'திருமுகம்' என்றனர்.

சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்குத் தாழை மடலில் கடிதம் எழுதியதை நாம் இங்கு நினைவில் கொள்ளலாம். ஒப்பனைக்கலை வாயிலாகக் கடிதத் தொடர்புகொண்டதைப் பெருங்கதை என்ற நூலின் வாயிலாக அறியமுடிகின்றது. திருவாலவுடையார் சேரமான் பெருமான் நாயனாருக்கு எழுதிய திருமுகம் பற்றி பெரியபுராணத்திலும் பதினோராம் திருமுறையிலும் காணப்படுகின்றது. தில்லைச்சிற்றம்பலவன் உமாபதிசிவத்துக்குப் பெற்றான் சாம்பான் பொருட்டு எழுதிய சீட்டுக்கவியும் ஆழ்வார் நாயன்மார் பாடிய விண்ணப்பப்பாக்களும் கடிதத் தொடர்பையே காட்டிநிற்கின்றன.

மார்க்ஸிம் கார்க்கி, நேரு, அண்ணா, கலைஞர் போன்றோரின் கடிதங்கள் குறிப்பிடத்தக்கன. பெட்ரண்ட் ரஸ்ஸல், தாகூர் போன்றோரின் கடிதங்கள் உலகப் புகழ்பெற்றவை. மு.வ. எண்ணற்ற வாழ்வியல் கடிதங்களுடன் அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு என்பன போன்ற கற்பனைக்


Unnati Educations
9899436384, 9654279279

கடிதங்களையும் எழுதியுள்ளார். இராமலிங்க அடிகளார், கவியோகி சுத்தானந்தபாரதியார் போன்றோர் எழுதிய கடிதங்களும் இங்கு நினைவு கூறத்தக்கன.

**10.** பின்வருவனவற்றுள் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. 3

*(i)* தம்பிக்கு கடிதம் எழுதியவர்......................................

*(ii)* எழுதியதை முடக்கி எழுதியதால்........................................ என்றனர்.

*(iii)* பேச்சு வழக்கில் கடிதம் என்பது.. ................................ என்று வழங்கப்படுகிறது.

**11.** சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக. 3

*(i)* சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எதில் கடிதம் எழுதினாள்?

(அ) ஓலை

(ஆ) தாழை

(இ) பத்திரம்

(ஈ) கடிதம்

*(ii)* விண்ணப்பப் பாக்கள்

(அ) ஆழ்வார்

(ஆ) கோவலன்

(இ) கலைஞர்

(ஈ) அரசர்

*(iii)* ஒப்பனைக்கலை கடிதத்தொடர்பைக் கூறுவது.

(அ) சிலப்பதிகாரம்

(ஆ) தொல்காப்பியம்

(இ) பெருங்கதை

(ஈ) பெரியபுராணம்



Unnati Educations
9899436384, 9654279279

**பின்வரும் பத்தியைப் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி (வினா எண் 12)-**

ஊடகங்கள் மூலம்தான் பெரும் திரளான மக்களுக்குத் தகவல்கள் போய்ச் சேருகின்றன. எனவே, இவற்றுக்கு 'மாஸ் மீடியா' என்று பெயர். ஊடகங்கள் பலவகையானவை. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், வார, மாதமிருமுறை பத்திரிகைகள், விளம்பரங்கள், வீடியோ விளையாட்டுகள், குறுந்தகடுகள் இப்படி ஊடகவடிவங்கள் இன்று ஏராளமாகப் பெருகிவிட்டன.

தகவல் தொழிநுட்பம் மூலமாக இவையனைத்தும் பெருந்திரளான மக்களைச் சென்று சேருவதால் இவற்றுக்கு மக்கள் தொடர்பியல் என்றும் சொல்வதுண்டு. இன்று, நாம் வாழ்கிற உலகில் இத்தகைய பெருந்திரள் ஊடகங்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் இல்லாத அன்றாட வாழ்க்கை ஒன்றைக்கூடச் செய்துபார்க்கமுடியாது! பல நடுத்தரக் குடும்பங்களில் காலையில் மக்கள் எழுந்த உடனேயே வானொலியை இயக்கி ஒலிவடிவில் தகவல்களைப் பெறுவது, பாடல்களை, உரையாடல்களைக் கேட்பது தினசரி நடைமுறையாகிவிட்டது. தொலைக்காட்சிகளை இயக்கி, பல்வேறு அலைவரிசைகளில் செய்திகள், திரைப்படங்கள், நெடுந்தொடர்கள் பாடல் காட்சிகள் ஆகியவற்றை ஒலி, ஒளி இரண்டும் இணைந்துவரும் 'காட்சி ஊடக வடிவில் கண்டு, கேட்டுச் சுவைப்பதும் தினசரி நிகழ்வு. காலையில் கண்விழித்ததுமே வீட்டுவாயிலில் கிடக்கும் செய்தித்தாள்கள் வார-மாத- மாதமிருமுறைப் பத்திரிகைகளை எடுத்து வைத்துப் படிப்பதும் அன்றாட வாழ்க்கையின் முதல் செயல்பாடாகிவிட்டது. இவற்றை 'அச்சு ஊடகம்' என்கிறோம்.

ஒரு காலத்தில் மிக வசதியானவர்களின் வீடுகளில் மட்டுமே இருந்த தொலைபேசி, கணினி வசதி இன்றைய உலகமயமாக்கல் சூழலில் சாதாரணமக்கள் அனைவரும் பயன்படுத்துகிற தகவல் தொடர்புச் சாதனங்களாகிவிட்டன. கடைக்காரர்கள், பிளம்பர்கள், பால்காரர்கள், எலக்ட்ரீசியன்கள், தச்சர்கள், காய்கறி விற்பவர்கள் உட்பட இன்று எல்லோர் கையிலும் மொபைல் போன் என்கிற செல்லிடப்பேசி இருக்கிறது. எந்த இடத்தில் என்ன வேலையில் ஒருவர் ஈடுபட்டிருந்தாலும் நினைத்த மாத்திரத்தில் அவரை வேறு யார் விரும்பினாலும் செல்லிடப்பேசி மூலம் தொடர்புகொண்டு பேசிவிட முடிகிறது.

**12.** சரியா தவறா எனக் கண்டறிக. (1து5=5மதிப்பெண்கள்) 5

*(i)* பத்திரிகைகளைப் படிப்பது அன்றாட வாழ்க்கையின் முதல் செயல்பாடாகிவிட்டது.

*(ii)* வானொலி என்பது காட்சி ஊடகமாகும்.

*(iii)* மாஸ் மீடியா என்பது ஊடகங்களின் பெயர்.

*(iv)* வசதியானவர்கள் கையில் மட்டுமே செல்லிடப்பேசிகள் உள்ளன.

*(v)* நடுத்தரக் குடும்பங்கள் வானொலியை இயக்கி ஒலிவடிவில் தகவல்களைப் பெறுவர்.



Unnati Educations
9899436384, 9654279279

**13.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 1

நிறுவன மேலாண்மை என்பது ?

(அ) அலுவல மேலாண்மை

(ஆ) ஒட்டுமொத்த நிர்வாகம்

(இ) தொழில்நுட்ப மேலாண்மை

(ஈ) நிதி மேலாண்மை

**பிரிவு இ : இலக்கணம்**

**14.** வேற்றுமைத்தொகை குறிப்பு எழுதுக. 1

முருகன் மனைவி -

**15.** பின்வருவனவற்றுள் அவை எம்மொழிச் சொற்கள் என்பதைக் கண்டறிந்து எழுதுக. 3

*(i)* தயார் -

*(ii)* தருமம் -

*(iii)* கம்மி -

**16.** பின்வருவனவற்றுள் கணினிச் சொற்களுக்குத் தமிழில் கலைச்சொற்களை எழுதுக. 2

*(i)* Designing -

*(ii)* Automation -

**17.** பின்வரும் வாக்கியங்களில் அவை பயின்றுவரும் அணியினை விளக்குக. 2

*(i)* பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் (திருக்குறள்)

*(ii)* பால்நிலவு

**18.** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. 1

விகாரப் புணர்ச்சி என்றால் என்ன ?



Unnati Educations
9899436384, 9654279279

## பிரிவு ஈ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாகளுக்கு விடையளிக்கவும். (வினா எண்** 19-20)

வ.உ.சிதம்பரனாருக்கு 23 வயதாகும்போது அவருடைய தந்தை திருச்செந்தூர் பிள்ளையவர்களின் மகள் வள்ளியம்மை என்பவரைத் திருமணம் செய்துவைத்தார். சிதம்பரனார் சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்தார். எல்லோரையும் சமமாகக் கருதும் மனப்பக்குவம் அவரிடமிருந்தது. தமிழின் மீது அவருக்கிருந்த ஆர்வத்தால் பலருக்கும் தமிழைக் கற்பித்தார்.

வ.உ.சி. மொழியின் மீதும் நாட்டின் மீதும் மிகுந்த பற்றுக்கொண்டவர். தேச விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த தருணம் அது. வ.உ.சி. தனது வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டார். அந்நிய துணிகளை எரித்தார். ஆங்கிலேயர்கள் இந்திய மக்களைச் சுரண்டவதைக் கண்டார். எனவே, ஆங்கிலேயரின் வணிகத்தைத் தகர்க்க எண்ணினார். 1906-ஆம் ஆண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். இதற்கு இந்திய வர்த்தகர்கள் பலரும் உதவினர்.

தமிழரின் கப்பல் அலைகடலில் சீறிப் பாய்ந்தது. சரக்கு வணிகமும் மக்கள் பயணமும் சுதேசிக் கப்பலில் நடைபெறத் தொடங்கிற்று. சிதம்பரனார் கப்பல் போக்குவரத்தோடு விவசாயம், நெசவு ஆகியத் துறைகளிலும் கவனம் செலுத்தினார். இவற்றுக்கென சங்கங்களை அமைத்தார். சென்னை விவசாயக் கைத் தொழிற்சங்கம், தரும செலவு சாலை, தேசியப்பண்டகச் சாலை ஆகியவை சிதம்பரனார் உருவாக்கியவை.

**19.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

*(i)* வ.உ.சி. சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கிய ஆண்டு?

(அ) 1936 (ஆ) 1906

(இ) 1926 (ஈ) 1936

*(ii)* வ.உ.சிதம்பரனார் எத்தொழிலைக் கைவிட்டார்?

(அ) மருத்துவர் (ஆ) கணக்கர்

(இ) வழக்கறிஞர் (ஈ) விவசாயம்



Unnati Educations
9899436384, 9654279279

(*iii*) சிதம்பரனாரின் மனைவி பெயர்?

(அ) வள்ளியம்மை

(ஆ) கண்ணம்மா

(இ) மூக்கம்மா

(ஈ) பொன்னுத்தாய்

**20.** **பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 1

சிதம்பரனார் சென்னை விவாசயக் கைத் தொழிற்சங்கம், தரும செலவு சாலை, ................................ ஆகியவற்றை உருவாக்கினார்?

**21.** **பின்வருவனவற்றுள் சரியா தவறா எனக் கண்டறிக.** 4

(*i*) ஐராதீஸ்வரம் கோவில் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் கட்டப்பட்டது.

(*ii*) தற்போதைய ஐராவதீஸ்வரர் ஆலயம் மூன்று நிலைகளோடு உள்ளது.

(*iii*) ஐராதீஸ்வரர் திருக்கோவிலை உலகமரபுச் சின்னம் என யுனஸ்கோ அங்கீகரித்துள்ளது.

(*iv*) தாராசுரம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது.

**22.** **பின்வருவனவற்றுள் விடுபட்ட இடங்களை நிரப்புக.** 2

(*i*) காலம் அறிந்து செயல்பட்டால்......................................... ஒருவரைவிட்டு விலகாது.

(*ii*) நாவுக்கரசர் எம்மதத்திற்கு ஆட்பட்டார்......................................................

**பகுதி ஆ**

**(பிரிவு அ )**

(செய்யுள் 5 + உரைநடை 6 = 11 மதிப்பெண்கள்)

**23.** **பின்வருவனவற்றுள் 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும்.** 2

பெண்கள் கூறும் வெவ்வேறு வாழ்க்கை அனுபவங்களை விளக்குக.

**24.** **பின்வருவனவற்றுள் 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும்.** 3

தமிழ்விடுதூது - விளக்குக.



Unnati Educations
9899436384, 9654279279

**25.** **பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும்.** 2

சிற்றிலக்கியங்கள் - சிறு குறிப்புத் தருக.

**26.** *(i)* தமிழகத்துக் கிராமியக் கலைகளுள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக. 2

(அல்லது)

*(ii)* எட்டுத்தொகை நூற்பெயர்களை எழுதுக.

**27.** *(i)* ஐந்திலக்கணங்கள் யாவை ? 2

(அல்லது)

*(ii)* ஏறு தழுவதல் என்றால் என்ன ?

## பிரிவு ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாகளுக்கு விடையளிக்கவும் (வினா எண் 28-29)**

**பேசுதல்**

மேலாண்மையில் பேசுதல் முக்கிய இடம் வகிக்கிறது. ஒருவர் பேசும்போது மற்றொருவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். கேட்டுக்கொண்டிருப்பவர் தனது பதில் கருத்தைத் தெரிவிப்பார். இவர்களது உரையாடல் தகவல் தருவதாகவும் இருக்கலாம். உடல் அசைவுகள் மூலம் வெளிப்படுத்துவதாகவும் இருக்கலாம். பேச்சுவார்த்தை, சாதாரண வாக்கிய அமைப்பு, முடிவுபெறாத கேள்விகள், அறிவுறுத்தல்கள் போன்ற வடிவிலும் இருக்கலாம். அவர்கள் பேசிக்கொள்ளும் சூழ்நிலை சாதாரணமாகவும் இருக்கலாம்: அசாதாரணமாகவும் இருக்கலாம். பேசுதல் என்பது மேலாண்மைத் தொடர்பின் முக்கிய அங்கமாகும்.

**கவனித்தல்**

கவனித்தல் என்பது மேலாண்மையின் மேம்பாட்டுக்கூறாகும். ஒருவர் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருக்கும் நபர், பேச்சில் குறுக்கீடு செய்யாமல் கவனமாகக் கேட்டுக்கொண்டே பின்னர், தக்கப் பதில் கூறவேண்டும். பலர் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால், முழுத் தகவலையும்


Unnati Educations
9899436384, 9654279279

தெரிந்துகொள்ளவதில்லை. சிலர் தகவல் தெரிப்பவரின் பாதிக் கருத்துக்கு மட்டுமே பதில் அளிக்கின்றனர். சிலர் தனக்குத் தேவையான சில விஷயங்களை மட்டும் காதில் வாங்கிக் கொள்கிறார்கள். புல தகவல்களை மனதில் கொள்ளாமலேயே இழந்துவிடுகிறார்கள். தகவல் தொடர்பிலும் கவனித்தலும் உள்வாங்கிக் கொள்ளுதலும் முக்கிய அம்சமாகும்.

**அசைவு**

நாம் எல்லோரும் தினம் தினம் உடல் மொழியின் அசைவுகள் மூலம் பல தகவல்களைப் பரிமாறிக் நொண்டிருக்கிறோம். பெரும்பாலான சமயங்களில் நமக்கே அது தெரிவதில்லை. உடல்மொழி என்பதற்காக நாம் தனியே பயிற்சிச் செய்ய வேண்டியதில்லை. மிக இயல்பாக நம்முடைய தினசரி நடவடிக்கைகளில் இது கலந்திருக்கிறது. நாமாக முயன்றாலும் அதை மறுக்கமுடியாது; தவிர்க்கமுடியாது. ஒலியைப் பயன்படுத்துவது, மௌனத்தைப் பயன்படுத்துவது, புன்னகைப்பது, தலையசைப்பது இதர அங்க அசைவுகள் மூலம் தூரத்தில் இருப்பவர்களுக்குச் சைகைக் காட்டி தகவல் தெரிவிப்பது போன்றவை உடல்மொழியாகும். உடல்மொழியை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். அதே சமயம் தவறாகப் புரிந்துகொள்ளவும் இடமுண்டு.

**28.** மேலாண்மைத் தகவல் தொடர்பின் மூன்று முக்கியக் கூறுகளைக் கூறுக. 2

**29.** *(i)* கவனித்தல் என்றால் என்ன? 2

(அல்லது)

*(ii)* அசைவு என்றால் என்ன?

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாகளுக்கு விடையளிக்கவும்.**
**(வினா எண்** 30-32**)**

**மேலாண்மைத் தகவல் தொடர்புக்கு முதன்மைக்கூறுகள்**

தகவல் தொடர்புக்குச் செய்தி அனுப்புநர் மற்றும் செய்தியைப் பெறுநர் மட்டும் போதாது. அவர்கள் இருவருக்கும் இடையில் ஓர் ஊடகம் தேவை. எடுத்துக்காட்டாக இருவர் தொலைபேசியில் பேசிக்கொள்ளும்போது அவர்களுக்கு ஊடே தொடர்புச் சாதனம் இருக்கிறது. இந்தத் தொடர்புச் சாதனம் ஊடகம், தொலைபேசி, ஒரு கடிதம் கூட தொடர்பு சாதனமே. மனித உறுப்புகளும்கூட ஊடகமாகச் செயல்படுகின்றன.

**அனுப்புநர்**

ஒருவர் ஒரு தகவலை அனுப்புவதிலிருந்து தகவல் தொடர்பு ஆரம்பிக்கிறது. தகவல் அனுப்புநர் ஒருவர் அல்லது பலருடன் தொடர்புக் கொண்டிருக்கலாம்.



Unnati Educations
9899436384, 9654279279

**பெறுநர்**

ஓர் அனுப்புநர் அனுப்பிய தகவலை எவர் ஒருவர் பெற்றுக்கொள்கிறாரோ அவரே பெறுநர். எவரும் அந்தத் தகவலைப் பெற்றுக்கொள்ளவில்லை எனில் தகவல் தொடர்பு முழுமைபெறாது. ஆனால், ஒருவர், தான் வந்த செய்தியை நிராகரிக்கலாம். ஒதுக்கித் தள்ளிவிடலாம். எனினும், அங்கே தகவல்தொடர்பு பூர்த்தியாகிறது. தகவலை நிராகரிப்பவர்அனுப்புநரின் செய்தியைப் பொருட்படுத்தவில்லை அவ்வளவுதான்.

**தகவல்**

ஒவ்வொரு தொடர்பிலும் ஒரு தகவல் செய்தி அடங்கியுள்ளது. இதன் பொருள் வேறுபட்டதாக இருக்கக்கூடும். அந்தத் தகவல் காதால் கேட்கமுடியாததாகவும் குறைபாடு உள்ளதாகவும் இருக்கலாம். தகவல்கள் பலவாறாகவும் சிக்கல் மிகுந்ததாகவும் இருப்பதுமுண்டு.

**ஊடகம்**

எல்லாத் தொடர்புகளுமே ஓர் ஊடகத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது. இதில் முதன்மையான ஊடகம் மனித உடல்தான். பயன்படுகிற ஊடகங்கள் பலவாகவும் சிக்கல் மிகுந்ததாகவும் இருக்கக்கூடும்.

**பதில் தொடர்பு**

மனிதர்கள் அனைவரும் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும்போது, தகவலை அனுப்பும்போது பெறுவரிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கின்றனர். தகவல் தொடர்பில் சிறந்து விளங்கும் நபர் செய்திபெறுவரிடமிருந்து மிகவும் புலப்படும்படியான, உடனடியான ஒரு பதிலைப் பெறும்போது அவர் தகவல் தொடர்பில் சிறப்பாகச் செயல்பட்டிருப்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். இந்தத் தொடர்பு நேர்மறையாகவும் இருக்கலாம்; எதிர்மறையாகவும் இருக்கலாம். மேலாண்மைத் தொடர்பில் பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும்.

**30.** *(i)* மேலாண்மைத் தகவல் தொடர்பில் ஊடகம் குறித்து எழுதுக. 2

(அல்லது)

*(ii)* மேலாண்மைத் தகவல் தொடர்பில் அனுப்புநர் குறித்து எழுதுக.

**31.** பதில் தொடர்பு என்றால் என்ன? 2

**32.** தகவல் தொடர்புக் கூறுகளைக் கூறுக. 2



Unnati Educations
9899436384, 9654279279

**33.** தமிழ்மொழி பல மொழிகளுக்குத் தாயாக விளங்கும் நிலைகளைத் தெளிவுப்படுத்துக. 3

**பிரிவு இ**

**34.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 2

*(i)* மேலாண்மை என்பது ................................ துறையாகும்.

(அ) உற்பத்தித்துறை (ஆ) அறிவுத்துறை

(இ) சந்தைத்துறை (ஈ) நிதித்துறை

*(ii)* ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தைக் குறிப்பது ?

(அ) அலுவலக மேலாண்மை (ஆ) நிறுவன மேலாண்மை

(இ) நிதி மேலாண்மை (ஈ) சந்தை மேலாண்மை

**35.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையத் தேர்ந்தெடுத்து நிரப்புக. 2

*(i)* மகசூல் என்பது....................... மொழிச்சொல்

(அ) பாரசீகம் (ஆ) உருது

(இ) வடமொழி (ஈ) அரபு

*(ii)* நிஜார் என்பது................................ மொழிச் சொல்

(அ) வடமொழி (ஆ) தமிழ்

(இ) அரபு (ஈ) உருது

**36.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 2

*(i)* பிறிதுமொழி அணி என்றால் என்ன ?

*(ii)* எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன ?


Unnati Educations
9899436384, 9654279279

**பிரிவு ஈ**

**37.** **பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும்.** 3

ஒழுக்கம் தவறாதவர் அடையும் நன்மைகள் எவையென ஆசாரக்கோவை உரைக்கிறது ?

**38.** **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** 2

*(i)* தொலைதூரக் கல்வியில் சேர்வதற்கான விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

*(ii)* அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு விண்ணப்பம் அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதுக.

**39.** **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** 4

*(i)* ''உண்டாலம்ம இவ்வுலகம்...'' எனும் பாடலின் கருத்தினை விளக்குக.

*(ii)* 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்.....'' எனும் பாடல்வழி கல்வியின் சிறப்பை எடுத்துரைக்க.

**பகுதி இ (பிரிவு உ)**

**40.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடுபட்ட இடத்தைப் பூர்த்தி செய்க. 2

*(i)* இறைவன் ஆடும் கூத்தை....................................... .என்பர்.

*(ii)* வேம்பின் பயன்பாட்டைத் தமிழர்கள் அறிந்து.................... ஆண்டுகள் ஆகிறது.

*(iii)* உலகம்.......................... பூதங்களின் கலவையால் ஆக்கப் பெற்றது.

**41.** *(i)* ஒரு நிறுவனத்தின் உயிர்நாடித்துறை 1

(அ) நிதித்துறை (ஆ) விளம்பரத்துறை

(இ) உற்பத்தித்துறை (ஈ) நீதித்துறை

*(ii)* நிறுவன மேலாண்மைக்குத் தேவையான திறன் ? 1

(அ) பலமொழி அறிவு (ஆ) முடிவெடுக்கும் திறன்

(இ) பேச்சுத்திறன் (ஈ) அதிகாரம்



**Unnati Educations**

**9899436384, 9654279279**

**42.** பின்வருவனவற்றுள் சரியான விடையைக் கண்டறிக. 2

*(i)* பாரதி பிறந்த இடம்...............

(அ) சென்னை (ஆ) புதுச்சேரி

(இ) மதுரை (ஈ) எட்டயபுரம்

*(ii)* தமிழ்மொழியின் தொன்மையான இலக்கண நூல்?

(அ) நேமிநாதம் (ஆ) நன்னூல்

(இ) தொல்காப்பியம் (ஈ) வீரசோழியம்

**43.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களுக்குள் விடையளிக்க. 2

*(i)* கண்ணகியின் தோற்றம் பற்றி வாயிற்காவலன் பாண்டியனிடம் கூறியவற்றை விவரிக்க.

*(ii)* கோப்பெருந்தேவி கண்ட தீக்கனாவை விளக்குக.

**44.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 4

*(i)* முக்கூடற்பள்ளு - சிறு குறிப்பு வரைக.

*(ii)* பதினெண் மேற்கணக்கு நூற்கள் குறித்து எழுதுக.

**45.** சிலப்பதிகாரம் பற்றி நீவிர் அறிவன யாவை? 4

★ ★ ★



Unnati Educations
9899436384, 9654279279